வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 8.5.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

10 மாநிலங்கள் மற்றும் 1 யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த 96 தொகுதிகளில், வரும் 13-ஆம் தேதி நடைபெற உள்ள, நான்காம் கட்ட மக்களவைத் தேர்தலுக்கான பிரச்சாரம், தீவிரமாக நடைபெற்று வருகிறது.

தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் 10 ஆண்டு சாதனைகளுக்கான பெருமை மக்களையே சாரும் என்று, பிரதமரும் மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால், ஆஷா பணியாளர்கள், மற்றும் அங்கன்வாடி ஊழியர்களின் கூலி, 2 மடங்காக உயர்த்தப்படும் என்று காங்கிரஸ் பொதுச் செயலர் திருமதி பிரியங்கா காந்தி கூறி உள்ளார்.

உலக செஞ்சிலுவை தினத்தை ஒட்டி, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு சிபி ராதாகிருஷ்ணன், செஞ்சிலுவை சங்கத் தன்னார்வலர்களுக்கு, வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தேர்தல்-மோடி

10 மாநிலங்கள் மற்றும் 1 யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த 96 தொகுதிகளில், வரும் 13-ஆம் தேதி நடைபெற உள்ள, 4-ஆம் கட்ட மக்களவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்த 4-ஆம் கட்ட தேர்தலில், மொத்தம் ஆயிரத்து 717 வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் உள்ளனர்.

4-ஆம் கட்ட மக்களவைத் தேர்தல் தொகுதிகளில் ஒன்றான, தெலங்கானா மாநிலம் வாரங்கல் தொகுதியில், பிரதமரும் மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். தோல் நிறத்தின் அடிப்படையில் மனிதர்கள் அவமதிக்கப்படுவதை நாடு சகித்துக் கொள்ளாது என்று, அவர் கூறினார்.

முன்னாள் பிரதமர் பிவி நரசிம்மராவை காங்கிரஸ் அவமதிப்பதாகவும், தேசிய ஜனநாயக கூட்டணி அரசு தான், நரசிம்மராவுக்கு பாரத ரத்னா விருது வழங்கியதாகவும் தெரிவித்தார். காங்கிரஸ்- பிஆர்எஸ் ஆகிய இரு கட்சிகளும், குடும்ப அரசியலுக்கே முக்கியத்துவம் அளிப்பதால், தெலங்கானா மக்கள் இம்முறை இக்கட்சிகளை புறக்கணித்து, வளர்ச்சிக்கு வாக்களிக்க வேண்டுமென திரு நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார். காங்கிரஸ் உள்ளிட்ட **இண்டி கூட்டணிக் கட்சிகள்** எங்கே ஆட்சி அமைத்தாலும், அரசையே ஏடிஎம் இயந்திரமாக மாற்றி விடுவதாக அவர் மேலும் குற்றம் சாட்டினார்.

முன்னதாக, கரீம்நகர் பகுதியில் திரு நரேந்திர மோடி தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் 10 ஆண்டு சாதனைகளுக்கான பெருமை மக்களையே சாரும் என்றார். கடந்த முறை மக்கள் தமக்கு அளித்த வாக்குகள் தான், பாதுகாப்பு துறையில் ஏற்றுமதி நாடாக இந்தியாவை மேம்படுத்தி இருப்பதாகவும், ஜம்மு-காஷ்மீரில் 370-ஆவது அரசியல் சாசனப் பிரிவை நீக்கி இருப்பதாகவும் அவர் கூறினார். **நாட்டிற்கே முதலிடம்** என்ற கொள்கை அடிப்படையில் பாரதிய ஜனதா கட்சி செயல்படுவதாக அவர் தெரிவித்தார். காங்கிரசும், பிஆர்எஸ் கட்சியும், ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள் தான் என்பதால், இக்கட்சிகளின் ஊழல் போக்கில் இருந்து தெலங்கானா மாநிலத்தை காப்பாற்றுதல் அவசியம் என்று திரு நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

முன்னதாக கரீம் நகர் **வேமுலவாடா** பகுதியில் உள்ள **ராஜ ராஜேஸ்வர ஸ்வாமி** கோவிலில் அவர் வழி பட்டார். பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று, ஆந்திர மாநிலம் ராஜம்பேட்டில் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர், விஜயவாடாவில் சாலை பவனி நடத்துகிறார்.

உத்தரபிரதேசம்

காங்கிரஸ் பொதுச் செயலர் திருமதி பிரியங்கா காந்தி இன்று உத்தரபிரதேச மாநிலம் ரே-பரேலி தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். மத்தியில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால், ஆஷா பணியாளர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், மற்றும், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்புத் திட்டப் பயனாளிகளுக்கான கூலி 2 மடங்காக உயர்த்தப்படும் என அவர் தெரிவித்தார்.

மூத்த பிஜேபி தலைவரும் மத்திய அமைச்சருமான திரு அமித் ஷா இன்று லக்கிம்பூர் கேரி மாவட்டத்தில் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் மத்திய அரசின் மக்கள் நலத் திட்டங்கள், பிரதமர் திரு நரேந்திர மோடியின் 3-ஆவது பதவிக் காலத்திலும் தொடரும் வகையில், மக்கள் இம்முறையும், பாரதிய ஜனதாவிற்கு வாக்களிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இன்று ஹர்தோய் மற்றும் கன்னாஜ் மாவட்டங்களிலும் அவர் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

சமாஜ்வாதி கட்சியின் தலைவர் திரு அகிலேஷ் யாதவ், இன்று உத்தரபிரதேஷ் மாநிலம் ஷாஜகான்பூரில் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில், பாரதிய ஜனதா கட்சி பொய்யான வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்குவதாக குற்றம் சாட்டினார். அவர் இன்று ஃபரூக்காபாத் பகுதியிலும் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுகிறார்.

*ஐந்தாம் கட்டம்*

8 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேங்களைச் சேர்ந்த 49 தொகுதிகளில், வரும் 20-ஆம் தேதி நடைபெற உள்ள, 5-ஆம் கட்ட மக்களவைத் தேர்தலில், 695 வேட்பாளர்கள் இறுதியாக களத்தில் உள்ளனர். ஏற்கப்பட்ட மனுக்களை விலக்கிக் கொள்வதற்கான அவகாசம் முடிவடைந்ததைத் தொடர்ந்து, இறுதி வேட்பாளர் எண்ணிக்கை பற்றிய விவரங்களை தேர்தல் ஆணையம் இன்று வெளியிட்டுள்ளது. 5-ஆம் கட்டத்தில் தேர்தல் நடைபெற உள்ள தொகுதிகளில், உத்தரபிரதேசத்தைச் சேர்ந்த 16 தொகுதிகளும், மகாராஷ்டிரா 13, மேற்கு வங்கம் 7, ஒடிசா 5, மற்றும் ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த 3 தொகுதிகளும் அடங்கும்.

*நிர்மலா*

நாட்டில் பொதுத் துறை நிறுவனங்கள் சீர்கேட்டில் உள்ளதாக மூத்த காங்கிரஸ் தலைவர் திரு ராகுல்காந்தி கூறி இருப்பதை மத்திய நிதியமைச்சரும் மூத்த பிஜேபி தலைவருமான திருமதி நிர்மலா சீதாராமன் மறுத்துள்ளார். காங்கிரஸ் தலைமையிலான முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் தான் பொதுத் துறை நிறுவனங்கள் நலிவடைந்ததாகவும், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, மூலதன செலவுகளுக்கு முக்கியத் துவம் அளிப்பதால் பொது துறை நிறுவனங்களின் செயல்பாடுகள் கணிசமாக வளர்ச்சி அடைந்திருப்பதே உண்மை என்றும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறி உள்ளார். உள்கட்டமைப்பு, மின்சாரம், போக்குவரத்து உள்ளிட்ட துறைகள் மீது

அரசு முக்கிய கவனம் செலுத்தி வருவதால், கட்டுமானம், கனரக இயந்திரங்களின் உற்பத்தி உட்பட பல்வேறு துறைகளைச் சேர்ந்த பொதுத் துறை நிறுவனங்கள், நேரடிப் பலன் பெற்றுள்ளதாக நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## செஞ்சிலுவை தினம்

உலக செஞ்சிலுவை தினம் இன்று கடைபிடிக்கப் படுகிறது. பாதுகாப்பு, சுகாதாரம், ஒற்றுமை மற்றும் சமூக உதவி தேவைப்படும் மக்களுடன் இணைந்து பணியாற்றும் கோடிக்கணக்கான தன்னார்வலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

செஞ்சிலுவை சங்கத் தன்னார்வலர்களுக்கு வாழ்த்து தெரிவித்து, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன் இன்று வெளியிட்டுள்ள செய்தியில், மதம், மொழி, இனம், மற்றும் அரசியல் எல்லைகளைக் கடந்து மனித குலத்திற்கு சேவை ஆற்றுவதில், செஞ்சிலுவை சங்கத்தின் பங்களிப்பு மிக சிறப்பானது என்று கூறி உள்ளார். தனித்துவமான மனிதாபிமான உணர்வுடன் செஞ்சிலுவை சங்கத்தை நிறுவிய ஹென்றி டுனான்ட்-டை நினைவு கூறும் இன்னாளில், சங்கத்தின் சேவை செயல்பாடுகளுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க அனைவரும் உறுதி ஏற்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். மனிதகுல சேவையே, ஒற்றுமைக்கும் உயர்வுக்கும் வழி வகிக்கும் என்றும் துணை நிலை ஆளுநர் தெரிவித்துள்ளார்.

தமிழக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வேலாயுதன் மறைவு குறித்து புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இரங்கல் தெரிவித்துள்ளார். அவரது மக்கள் பணியும், மக்கள் மீது அவர் கொண்டிருந்த அன்பும் பாராட்டத் தக்கது என்று, துணை நிலை ஆளுநர், இரங்கல் செய்தியில் கூறி உள்ளார். வேலாயுதம் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள்வதாகவும் அன்னாரின் ஆன்மா அமைதி பெற இறைவனை வேண்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

1996-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில், பாரதிய ஜனதா கட்சியின் முதல் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, மாநிலத்தின் இன்றைய வளர்ச்சிப் பயணத்திற்கு வித்திட்டவர் வேலாயுதம் என்று மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன், தமது இரங்கல் செய்தியில் கூறி உள்ளார்.

*நமச்சிவாயம்*

புதுச்சேரியில், முதலமைச்சராக திரு ரங்கசாமி பதவி ஏற்று, 3 ஆண்டுகள் முடிந்து இன்று 4-ஆம் ஆண்டு தொடங்கி இருப்பதை ஒட்டி, மாநில உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், முதலமைச்சர் திரு ரங்கசாமியை நேரில் சந்தித்து, பொன்னாடை மற்றும் பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தார்.

*மாணவர் சேர்க்கை*

புதுச்சேரியில் நீட் அல்லாத இளங்கலை தொழில் முறை படிப்புகள், கலை-அறிவியல், வணிகம், மற்றும் நுண்கலை படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கு, இன்று முதல், வரும் 22-ஆம் தேதி வரை, இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என சென்டாக் அறிவித்துள்ளது. சென்டாக் அல்லாத படிப்புகளில் மொத்தம் 9 ஆயிரத்து 973 மாணவர் சேர்க்கை இடங்கள் உள்ளன. பிற மாநில மாணவர்களும், அதற்கான இடஒதுக்கீட்டின் கீழ் தகுதியான படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

*வானிலை*

வரும் 15-ஆம் தேதி வரையிலான 5 நாட்களில், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை, 2 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக குறையக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கடலோர பகுதிகளில் 37 டிகிரி செல்வியஸ் வரை வெப்ப நிலை பதிவாகலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப் படுகிறது. கோவை, நீலகிரி, திருப்பூர், திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக கரூர் பரமத்தியில், 41.5 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகி உள்ளது. திருவண்ணாமலை மாவட்டம் கீழ் பெண்ணாத்தூர் உள்ளிட்ட இடங்களில், அதிகபட்சமாக 9 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளது. கடலூரில் 2 சென்டிமீட்டரும், விழுப்புரத்தில் 1 சென்டிமீட்டரும் மழை பதிவாகி உள்ளது.

*ஐபிஎல்*

ஐபிஎல் கிரிக்கெட்டில் இன்று மாலை 7.30 மணிக்கு ஐதராபாத்தில் நடைபெறும் போட்டியில், லக்னோ-ஐதராபாத் அணிகள் மோத உள்ளன. நேற்று இரவு டெல்லியில், டெல்லி- ராஜஸ்தான் அணிகளுக்கு இடையே நடைபெற்ற போட்டியில், டெல்லி அணி, 20 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

*தலசீமியா*

உடலில் ரத்த சிவப்பணுக்களின் உற்பத்தியை பாதிக்கும் மரபணு நோயான தலசீமியா குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், உலக தலசீமியா தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. தலசீமியா நோயை கண்டுபிடிப்பதில் மரபணு பரிசோதனையின் முக்கியத் துவம் குறித்தும் தலசீமியா நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை மற்றும் இதர உதவிகளை வழங்குவது குறித்தும் இன்று பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

உலகில் ஆண்டுதோறும் 3 லட்சம் குழந்தைகள் தலசீமியா நோயுடன் பிறக்கின்றன. தாலசீமியா நோயை ஏற்படுத்தக்கூடிய மரபணுக் குறைபாடுகள், உலகெங்கிலும் 10 கோடி பேருக்கு இருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

தலசீமியா நோய் சிகிச்சை அளிக்கத் தக்கதே என்றும், உரிய பரிசோதனைகள் மூலம் நோயைக் கண்டுபிடித்து சிகிச்சை எடுத்துக் கொண்டால் தீவிர இரத்த சோகயை தடுக்க முடியும் என்றும் புதுடெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையின் இரத்தவியல் துறை பேராசிரியர் டாக்டர் தூளிகா சேத், ஆகாஷ்வாணி செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

10 மாநிலங்கள் மற்றும் 1 யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த 96 தொகுதிகளில், வரும் 13-ஆம் தேதி நடைபெற உள்ள, நான்காம் கட்ட மக்களவைத் தேர்தலுக்கான பிரச்சாரம், தீவிரமாக நடைபெற்று வருகிறது.

தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் 10 ஆண்டு சாதனைகளுக்கான பெருமை மக்களையே சாரும் என்று, பிரதமரும் மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால், ஆஷா பணியாளர்கள், மற்றும் அங்கன்வாடி ஊழியர்களின் கூலி, 2 மடங்காக உயர்த்தப்படும் என்று காங்கிரஸ் பொதுச் செயலர் திருமதி பிரியங்கா காந்தி கூறி உள்ளார்.

உலக செஞ்சிலுவை தினத்தை ஒட்டி, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு சிபி ராதாகிருஷ்ணன், செஞ்சிலுவை சங்கத் தன்னார்வலர்களுக்கு, வாழ்த்து தெரிவித்துள்ளார்.

--------------------------